1986 ஏப்ரல் 25]

திரு. எஸ். சிவராமன் : தலைவர் அவர்களே, கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் மூலமாகக் கொடுக்கப்பட்ட கடன் பாதியிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. இப்போது சென்று கேட்டால், 'டாட்கோ' மூலமாக அவர்களுக்குக் கடன் கொடுக்கப்படும் என்று சொல்லி, பல வீடுகள் தென்னாற்காடு மாவட்டத்தில் பாதியிலே நிற்கின்றன. தீயினால் பாதிக்கப்பட்ட இஞ்சாநத்தம், படப்பை பகுதிகளிலுள்ள வீடுகளுக்கு கடன் கொடுக்கப்படாததை இதுவரை அரசு பரிசீலிக்கவில்லை. ஆகவே தீயினால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு முன்னுரிமை கொடுத்து, வீடுகள் கட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, தீவிபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வருவாய்த் துறை மூல மாக உடனடியாக வட்ட ஆட்சியர் மூலமாக உதவிசெய்கின்ற தன்மையோடு இப்போது நடந்து வருகிறது. வீட்டு வசதி சங்கம் மூலமாக, பாதிக்கப்பட்டவர்களுக்குச் சொந்தமாக பட்டா அவர்களுக்கு இருந்தால் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கின்ற முறையில் அரசு உதவுகின்ற தன்மையில் ஈடுபடும்.

திருச்சியில் இராணுவத்துக்குச் சொந்தமான நிலங்கள்.

565—(*வினா எண். 5136) திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி ஜங்ஷன் அருகே உள்ள ராணுவ இலாக்காவிற்கு சொந்தமான (Shooting range) பகுதியை தமிழக அரசிற்கு ராணுவ இலாக்கா அளித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திருச்சி நகரில் இப்பகுதியை வீட்டு வசதித் துறை ஏற்று வீடுகள் கட்ட முன்வருமா ?

மாண்புமிகு திரு. [என். நல்லுசாமி : (அ) மற்றும் (ஆ) இல்லை. ஆனால் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. க. சோலைராசு : தலைவர் அவர்களே, இன்றைய தினம் திருச்சி நகரம் இதயம் போன்ற பகுதியாக இருக்கிற காரணத்தினால் நகரத்தின் மத்தியில் இருக்கிற பகுதியாக அது இருப்பதால் துப்பாக்கிச் சுடுதல் போன்ற பயிற்சிகள் அங்கே நடத்தப்படுவதால் ஒரு முறை அங்கே துப்பாக்கிச் சூடு நடைபெற்று ஒருவர் பலியாகி மற்றும் பலர் காயம் அடைந்திருக்கிறார்கள், அந்தப்பயிற்சி ஆபத்தான இடத்தில்நடத்தப்படுவதால் வேறு இடத்தை அதற்காக மையப் பேரரசுக்குக் கொடுத்துவிட்டு அந்த இடத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? அமைச்சர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அவர்கள் திருச்சி நகரத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தினால் அது குறித்து அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, திருச்சி ஜங்ஷன் பகுதிக்கு வெகு அருகாமையில் இருக்கிற பொது மக்கள் அதிகமாகக் கூடுகிற இடத்தில் இந்த இடம் இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் வீட்டு வசதி வாரியத்தில் நூற்றுக்கணக்கான வீடுகள் கட்டப்பட்டு குடியிருப்பிற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த இடத்தைப் பொறுத்தவரையில் மாவட்ட ஆட்சித் தலைவர் தமிழக அரசின் மூலமாக அந்த இடம் நகரத்தின் மையப் பகுதியில் இருக்கிற காரணத்தினால் அந்த இடம் வீட்டு வசதி வாரியத்திற்கும் மற்ற காரியங்களுக்கும் தேவைப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். வீட்டு வசதித் துறை இந்தியத் துணைக் கண்ட அமைச்சர்கள் மாநாட்டில் நான் கலந்துகொண்டபோது டெல்லியிலே அங்கே அப்போது இராணுவ அமைச்சராக இருந்த திரு. நரசிம்ம ராவ் அவர்களைச் சந்தித்து திருச்சிக்கு அந்த இடம் தேவை என்பதை மட்டுமல்ல தமிழகத்திலே ஒரு நல்ல நகரம் உருவாகிற அளவுக்கு 273 ஏக்கர் நிலம் அந்த இடத்தில் இருக்கிறது. அதற்கு மாற்று இடமாக 292.8 ஏக்கர் நிலம் தருவதாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல் எனக்கு நினைவு இருக்கிறது, ஒரு முறை துப்பாக்கி சுடும்போது அங்கே ஒருவர் இறந்துவிட்டதாக பத்திரிகையிலே பார்த்ததாக எனக்கு நினைவு இருக்கிறது. ஆகவே ஆபத்தான அந்தச் சூழ்நிலையில் அது அங்கே இருக்கக்கூடாது என்று அரசு மீண்டும் எடுத்துச் சொல்லும். மத்திய அரசு அதற்கு உதவும் என்று நம்புகிறேன்.

தூத்துக்குடி மீன்வளத்துறைத் தொழிலாளர்கள்,

566—(*வினா எண். 3527) திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மீன் துறைக்கு சொந்தமான பி.எஸ். 2., பி.எஸ்.5., பி.எஸ்.6 ஆகிய மூன்று மீன்பிடி படகுகள் இப்பொழுது மங்களூருக்கு அனுப்பப்படுவதால் அவற்றில் பணியாற்றி வந்த 20 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு எம். ஆர். கோவேந்தன் : ஒரு விவர அறிக்கை *அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

---

733 *ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.